ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/37 - 2020 ජූලි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.07.02

*2182/37 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*22 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 22 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் மூலம், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான்,*

*இக்கட்டளை மூலம்,*

(i) *2017.11.17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை 1 இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் பின்வருபவை நீங்கலாக, இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆட்கள் மூலம் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்குகளூடாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்வதை இடைநிறுத்துகின்றேன் :*

(அ) *வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள்,*

(ஆ) *சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கி முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடு மீது பிரயோகிக்கப்படக்கூடிய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலினை நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று,*

1A - PG 5045 — 542 (2020/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) முதலீட்டினைப் பெறுபவரின் பணியாற்று மூலதனத் தேவைகளின் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 20,000 வரை, சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு கூட்டிணைக்கப்பட்ட/தாபிக்கப்பட்ட வெளிநாடுகளில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணைக் கம்பனிகளில் அல்லது கிளை அலுவலகங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியங்களின் மேலதிக முதலீடு/மேலதிக உட்செலுத்தல் (ஏற்புடையவாறு),

(ஈ) வதியும் கம்பனிகளால் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாட்டில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தொடர்புபடுத்தல், சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த அலுவலகங்களின் பராமரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 20,000 வரையான தகைமையுடைய பணவனுப்பல்கள், ஆயினும், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவுசெய்தல் பற்றி திருப்தியடைய வேண்டும்.

(ii) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது ஏதேனும் தொகைக்கான அனுமதிக்கப்பட்ட நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் அல்லது உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 20,000 வரை மூலதனக் கொடுக்கல் வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் தவிர இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துகின்றேன் ;

(iii) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது 2017.11.17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியில் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் முற்கொடுப்பனவுகளைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபா கணக்குகளூடாக புலம்பெயர் கொடுப்பனவுகளின் கீழ் நிதியங்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 20,000 வரை மட்டுப்படுத்துகின்றேன் ;

(iv) முதல் தடவையாக புலம்பெயர் முற்கொடுப்பனவைக் கோருகின்ற புலம் பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் கொடுப்பனவினை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 30,000 வரை மட்டுப்படுத்துகின்றேன் ;

(v) 2017.11.17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியில் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை 1 இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 (10) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையிலான அனுமதி வழங்குவதற்கு நாணயச் சபையினை அனுமதித்தல், ஆயினும்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதாக இருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள துணை நிறுவனமொன்றில் அல்லது கிளையொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீது ஏற்புடைய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல் வேண்டும்.

இக்கட்டளையானது, இக்கட்டளையின் திகதியிலிருந்து 6 மாத காலப்பகுதிக்கு செல்லுபடியானதாகும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2020, யூலை 02.

07-438

இலங்கை அரசாங்கத அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.